முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

<u>அ.வ.எண். 51/2020</u>

நாள். 24.11.2025 வா.சா.1 – திரு.ஜான்சன்

த/பெ - திரு.தேவசகாயம்

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>

<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்கிறீர்கள் என்றால் 1 வது பிரதிவாதிக்கு மின்சார இணைப்பு கொடுத்துள்ளார்கள், அந்த மின்சார இணைப்பு துண்டிப்பு செய்ய வேண்டும், கூட்டு பட்டாவில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது அதை நீக்கம் செய்ய வேண்டும் என பரிகாரம் கேட்டுள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராதை படித்துள்ளீர்களா என்றால் படித்துள்ளேன். முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளீர்கள் அதில் சொல்லப்பட்டுள்ள விவரம் உங்களுக்கு நன்கு தெரியும் என்றால் சரி தான்.

2) நீங்கள் சொல்வது போல பட்டா சம்மந்தமான கேள்விகளோ, பரிகாரங்களோ, மின்சார இணைப்பு துண்டிக்க வேண்டும் என்று பரிகாரங்களோ கேட்கவில்லை என்றால் சாட்சி பதில் சொல்லாமல் சும்மா நிற்கிறார். பிராதில் 13 வது பாராவில் வழக்கு மூலம் பற்றி சொல்லி உள்ளீர்கள் என்றால் சரி தான். அதில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் மின் இணைப்பு கேட்ட காலத்திலும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி ஞாபகம் இல்லை.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.24 13:33:35 +0530

3) 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் ஏதாவது கொடுத்தாரா என்றால் கொடுத்தார் என்று தகவல் தெரிந்ததால் 2 வது பிரதிவாதி மீது வழக்கு தொடுத்தேன். அவ்வாறு விண்ணப்பம் கொடுத்தார் என்று ஊர்ஜிதம் செய்ய நீங்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் வழக்குரையில் கூறுவது போல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் மின் இணைப்பு கேட்டு எந்த விண்ணபத்தையும் வழங்கவில்லை எனவே வழக்கிற்கு 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலம் எதுவும் இல்லை என்று கருதி வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

4) உங்கள் வழக்கில் 'ஆ' பரிகாரமாக போலி ஆவணங்கள் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு மின் இணைப்பு வழங்க கூடாது என பரிகாரம் கேட்டுள்ளீர்கள் எவைஎவை போலி ஆவணங்கள் என பட்டியலிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. கூறப்படுகிற போலி ஆவணங்களை போலி ஆவணங்கள் என விளம்புகை செய்ய பரிகாரம் எதுவும் வழக்கில் கோரப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5) தபசில் சொத்து பொறுத்து விளம்புகை செய்யக் கோரியும், போலி ஆவணங்கள் என விளம்புகை செய்யக் கோரியும் பரிகாரம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. இந்த

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.24 13:33:42 +0530

வழக்கின் 3ம் பிரதிவாதி திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் என்றால் சரி தான். அரசு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் 80(1) அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6) உரிமையியல் நடைமுறைச் சட்டங்கள் பின்பற்றப்படாததால் அரசு அதிகாரிகளுக்க எதிராக நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் நீங்கள் கேட்கும் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.24 13:33:48 +0530